1993 அக்டோபர் 26]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டம், புரசை, பெரம்பூர் வட்டம், ஓட்டேரி பகுதியில் திடீர் நகர், சிவசண்முகபுரம் '-ஏ'' பிளாக், மற்றும் 'பி'' பிளாக், ஓட்டேரி நல்லாங்கரை, ப்ருக்ளின் ரோடு ஆகிய பகுதிகளில் குடிசைப் பகுதிகள் அமைந்திருக்கின்றன. இந்தக் குடிசைப் பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகளைச் செய்து முடித்துள்ளது. குறிப்பாக திடீர் நகர்ப் பகுதியில் மொத்தமுள்ள 102 மனைகளிலே 55 மனைகளைக் குடியிருப்புக்காக ஒதுக்கீடு செய்து குத்தகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைப் போல சிவசண்முகபுரம் பகுதியில் மொத்தமுள்ள 734 மனைகளில் 438 மனைகள் குடியிருப்போருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு குத்தகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மீதி உள்ளவர்களுக்கு, அவர்கள் குடிசைப் பகுதி மாற்று வாரிய விதிகளுக்கு உட்பட்டு நிலக்கிரயம் முதலியன செலுத்த முன் வராத காரணத்தால் இன்னும் அவர்களுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்ய உத்தரவிடப்படவில்லை. மேற்கூறிய குடிசைப் பகுதியைச் சேர்ந்த நிலங்கள் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன் மனை ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்படும். அதைப் போல நல்லாங்கரை பகுதியில் இருக்கிறவர்கள் கரை ஓரங்களில் இருக்கிற காரணத்தாலே அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 13, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

13—

துறையூரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை.

*19102—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் நகரில் சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவுக்கு பதில் சொல்வதற்கு முன்பு எங்களுடைய இதய தெய்வம்

டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியை வணக்கத்தோடு தெரிவித்துக்கொண்டு வினாவுக்கு விடை அளிக்கிறேன்.

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் இல்லை என்று சொன்னதில்லை. இருந்த போதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அடுத்த ஆண்டாவது உப்பிலியாபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது துறையூர் நகரில் தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவிடம் எந்தத் திட்டமும் இல்லை. எனினும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கு இடமில்லை என்பதை முழுமையாக செய்து காட்டியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர் தகுந்த தொழில் திட்டங்களுடன் 25 விழுக்காடு தொகையுடனே முன்வருவார்களானால், தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடன் கையகப்படுத்தி தொழிற்பேட்டை ஒன்றினை நிறுவ சிட்கோ தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 14, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

14—

குன்னத்தூர் ஊராட்சிப் பள்ளிகளில் சத்துணவுக்கூடம் கட்ட நடவடிக்கை

*21538—டாக்டர் மு. சீனியம்மாள் :
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, குன்னத்தூர் ஊராட்சி பள்ளிகளில் சத்துணவுக்கூடம் கட்ட அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS